


# தலைப்பு: பொங்கல்

## வழங்கியோர்

### பொங்கல்!

தைப்பொங்கல்
முத்தான நெல்மணிகள்
கொத்தாக எடுத்துவந்து
சத்தான கனிகளுடன்
தித்திக்க பொங்கிடுவோம்

உற்றதொரு தொழிலாக
உறுதுணையில் உளவரினம்
வெற்றியொரு வேங்கையாக
விளச்சல்களும் பொங்கிவரும்

சொந்தபந்தம் சொர்க்கமென
சங்கடங்கள் தீர்த்துவைத்து
விந்தைமொழி விரியவைத்து
முந்திவந்து பொங்கிடுவர்

பெற்றெடுத்த திருநாளில்
பேதைகளின் பெருந்துயரும்
உற்றதுணை தெய்வமென
பொற்காலம் பொங்கிடுமே

**சரளா விமலராஜா**
**சுவீஸ்.**

### தைப்பொங்கல் திருநாள்!

தமிழர் திருநாளாம்!
தைப்பொங்கல் திருநாள்!
தை பிறந்தால் வழி பிறக்கும்!
தை மாத முதல்நாள்!
பூலாம்பூ காப்பு கட்டி
தொடங்கும் அந்த திருநாள்!
நம் காணும் பொங்கல் நந்நாள்!
இரண்டாம் நாளாம் கதிரவன் திருநாள்!
ஒய்வின்றி ஒளி கொடுப்பான் பகலவன்! அவனாலே!
விளைந்து நிற்கும் நெல்மணிகளைப்
புதுப்பானையில் பொங்கலிட்டு! அவன்முன்னே
படையலிட்டு!
நன்றி கூறும் நன்னாள்!
சூரியப்பொங்கல் திருநாள்!

மறுநாளோ மாட்டுப்பொங்கல்! உழவர்களின் பெருநாள்!
உழவனின் உற்ற நண்பனாம் மாடுகளுக்கு!
நன்றி கூறும் நன்னாள்!
மண் பானையில் புத்தரிசிப் பொங்கலிட்டு!
பூசணிக்காய் குழம்பு வைத்து!
புதுக்கரும்பு உடைத்து வந்து!
பெரும் படையல் அங்கே வைத்து! கோமாதாவுக்குக்
கொடுத்து பகிர்ந்துண்ணும் நன்னாள்!
மாட்டுப் பொங்கல் திருநாள்!
அடுத்தோ வீரர்களின் பெருநாள்! அந்த ஜல்லிகட்டு
திருநாள்! அலங்காநல்லூர் மட்டுமின்றி!
அனைத்துலகையும் அதிரவைக்கும் வீரத்திருநாள்!
அழகழகா கோலமிட்டு!
அதில் வண்ண நிறங்களிட்டு!
புத்தரிசிப் பொங்கலிட்டு!
பெரும்படையல் அங்கே வைத்து!
மகிழ்ச்சி பொங்கும் திருநாள்! தைப்பொங்கல் திருநாள்!
கொண்டாடி மகிழ்வோம்!
எந்நாளும் மகிழ்வோம்!

**-வினோதினி**

**பொங்கல்!**

மாக்கோலம் பூக்கோலம்
மகிழ்வான அக்காலம்
பாக்கோல வாழ்த்துகள்
பகிர்ந்த நற்காலம்
கண்டாங்கி சேலைகட்டி
கண்ணாடி வளையொலிக்க
கச்சிதமாய் பொங்கலிட்டு
கதிரவனைக் கும்பிட்டு
சொந்தபந்தம் மனம்மகிழ
பந்திவச்சு இலைபோட்டு
பாசமா பரிமாறி
குந்திச் சுவைத்து
கைவலிக்கக் கும்மிகொட்டி
களிப்புடனே ஆடிப்பாடி
நெய்மணக்கும் பொங்கல்போல்
நேசமுடன் வாழ்ந்திருந்தோம்!
மாடு கன்றுகளை
மகிழ்வுடனே குளிப்பாட்டி
மஞ்சள் குங்குமத்தில்
பொட்டிட்டு பூச்சூட்டி
கொம்பிலே நிறம்தீட்டி
கழுத்திலே மணிகட்டி
நெற்றிச் சலங்கை
நேர்த்தியாய் ஒலியெழுப்ப
வாசலிலே சோறுபொங்கி
வணங்கி நன்றிசொல்லி
வாய்பேசா உயிர்களுக்கு
வாய்நிறைய ஊட்டிவிட்டு
உழுகின்ற காளைகளை
உடன்பிறப்பாய் மதித்து
வாழுகின்ற பண்பாடு
வழிவழியாய் நம்மோடு!
காணும் பொங்கலன்று
கண்டு வணங்குவதும்
காலில் விழுவதும்
கைதொழுது நிற்பதும்
காசு பரிசளித்து
கட்டியணைத்து வாழ்த்துவதும்
காணக் கிடைத்திடுமா
கண்கலங்கி ஏங்குதம்மா!
மகராசன் பொங்கலிலே
மாடு கன்றுகளும்
மண்ணின் மைந்தர்களும்
காடுகழனிகளும்
நலமுடனே வளம்பெருகி
நன்றாக வாழ்ந்திருக்க
குலதெய்வம் என்றெண்ணி
கும்பிட்டு வாழ்த்துவோம்!

**அ. தமிழரசி**